இணைப்பு IV

(662 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 25 – இயக்கூர்திகள் சட்டங்கள்–நிருவாகம் (உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

அறிவிப்புகள், 2010–2011

I. புதிய கட்டடங்கள்

1. விழுப்புரம், சேலம், தஞ்சாவூர், ஈரோடு மற்றும் விருதுநகர் ஆகிய ஐந்து துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகக் கட்டடங்கள் ரூ. 396.73 இலட்சம் செலவில் கட்டப்படும்.

2. திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு நிலம் கிடைப்பதன் அடிப்படையில், ரூ.144.00 இலட்சம் செலவில் கட்டடம் கட்டப்படும்.

3. விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை பகுதி அலுவலகம், கரூர் மாவட்டம் குளித்தலை பகுதி அலுவலகம் (நிலம் கிடைக்கும் அடிப்படையில்), திருச்சி மாவட்டம் மணப்பாறை பகுதி அலுவலகம் (நிலம் கிடைக்கும் அடிப்படையில்) மற்றும் வேலூர் மாவட்டம் அரக்கோணம் பகுதி அலுவலகம் ஆகிய நான்கு அலுவலகங்களுக்கும் ரூ. 285.18 இலட்சம் செலவில் கட்டடங்கள் கட்டப்படும்.

4. விழுப்புரம் மாவட்டம், திருச்சிற்றம்பலம் சோதனைச் சாவடிக்கு ரூ. 17.00 இலட்சம் செலவில் கட்டடம் கட்டப்படும்.

5. விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை, வேலூர் மாவட்டம், அரக்கோணம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஆகிய மூன்று பகுதி அலுவலகங்களுக்கு ஓட்டுநர் தேர்வு தளங்கள் ரூ. 126.36 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

2010 ஏப்ரல் 29]

II. புதிய அலுவலகங்கள்

6. திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூர் ஆகிய இரண்டு இடங்களில் புதிய பகுதி அலுவலகங்கள் அமைக்கப்படும்.

7. திருப்பூர் மாவட்டம் தாராபுரம் மற்றும் சேலம் மாவட்டம் ஆத்தூர் பகுதி அலுவலகங்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாகத் தரம் உயர்த்தப்படும்.

III. 2010–2011 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் கட்டடங்கள் மற்றும் கணினிகள்

8. வேலூர் மாவட்டம் வாணியம்பாடி பகுதி அலுவலகத்திற்கு ஓட்டுநர் தேர்வுதளம் கட்டுவதற்கும், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு கணினி வசதி மற்றும் கணினி உபகரணங்கள் வாங்குவதற்கும் ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கப்படும்.

IV. சாலைப் பாதுகாப்பு வரி வருவாயிலிருந்து செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள்

9. கடந்த ஆண்டு, புதிய மோட்டார் வாகனங்கள் பதிவு செய்யப்படும்பொழுது கூடுதல் வரி எனும் சாலைப் பாதுகாப்பு வரி 1-8-2009 முதல் விதிக்கப்படும் எனவும், சாலைப் பாதுகாப்பு வரிமூலம் கிடைக்கும் வரி வருவாயை சாலைப் பாதுகாப்பு தொடர்பான பணிகளுக்கே பயன்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில், சாலை விபத்தில் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாலை விபத்தில் இறந்தோர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் வேறெந்த நல வாரியங்களாலும் நிவாரண நிதி பெறாத இனங்களில், முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியிலிருந்து ஏற்கெனவே வழங்கப்படும் கருணைத் தொகையை இறப்புக்கு 10,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாகவும், நிரந்தர செயலிழப்புக்கு 6,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாகவும், ஒரு கண் அல்லது ஒரு கை/கால் செயலிழப்புக்கு 4,000 ரூபாயிலிருந்து 7,000 ரூபாயாகவும், ஏனைய சிறு காயங்களுக்கு 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாகவும் உயர்த்தி, வரும் 1-6-2010 முதல் வழங்கப்படும்.

[2010 ஏப்ரல் 29

10. மேலும், சாலை விபத்துகளைக் குறைக்க, மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் , உள்ளாட்சிச் சாலைகளில் எதிர்வரும் வாகனங்கள் தெரியாத இடங்களில் (Blackspots) சாலைகளைச் சரி செய்வதற்கும், தேசிய, மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் உள்ளாட்சிச் சாலைகளில் அமைந்துள்ள தரைப் பாலங்கள் மற்றும் பாலங்கள் முதலானவற்றை அகலப்படுத்துவதற்கும், தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளின் முக்கிய இடங்களில் அதிவேகமாக இயக்கப்படும் வாகனங்களை கேமரா மற்றும் மின்னணு சாதனங்கள் மூலம் கண்காணித்து ஒழுங்குபடுத்துவதற்கும் மற்றும் வாகன விபத்துகளைக் குறைக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கும் சாலைப் பாதுகாப்பு வரி வருவாய் பயன்படுத்தப்படும்.

V. மோட்டார் வாகன விதிகளுக்கு விலக்கு தேவைப்படும் குறிப்பிட்ட சில வாகனங்களைத் தாமதமின்றி உடனுக்குடன் பதிவு செய்வதற்கான அரசாணைகள்:-

11. "ரிக்" பொருத்தப்பட்ட வாகனங்களைப் (Rig mounted vehicles) பதிவு செய்யப்பட வேண்டுமானால் அவ்வாகனத்தின் கூடுதல் நீளம் குறித்து ஒவ்வொரு வாகனத்திற்கும் அரசாங்கத்திடமிருந்து விதிகளுக்கு, விலக்கு ஆணை பெற்ற பிறகுதான் பதிவு செய்யப்படுகின்ற நிலை பல ஆண்டுகளாக உள்ளது. இதனால் ஏற்படும் காலதாமதத்தால் வாகன உரிமையாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே, இத்தகைய வாகனங்களை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திலேயே உடனுக்குடன் பதிவு செய்யத் தேவையான அரசாணை வெளியிடப்படும்

12. Tractor-driven Combine Harvester எனும் விவசாய அறுவடைக் கருவியுடன்கூடிய டிராக்டர் வாகனத்தைப் பதிவு செய்ய வேண்டுமானால், அவ்வாகனத்தின் கூடுதல் நீளம் குறித்து ஒவ்வொரு வாகனத்திற்கும் அரசாங்கத்திடமிருந்து விதிகளுக்கு விலக்கு ஆணை பெற்ற பிறகுதான் பதிவு செய்யப்படுகின்ற நிலை கடந்த சில ஆண்டுகளாக உள்ளது. விவசாயிகளுக்குப் பேருதவியாயிருக்கும் இவ்வாகனங்களைக் காலதாமதமின்றி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திலேயே உடனுக்குடன் பதிவு செய்ய ஏதுவாக தக்க அரசாணை வெளியிடப்படும்.

2010 ஏப்ரல் 29]

VI. ஆட்டோ ரிக்ஷா–தடைநீக்கம்

கடந்த 12 ஆண்டு காலமாக சென்னையில் ஆட்டோ ரிக்ஷா வண்டிகளைப் பதிவு செய்வதற்கான தடை நடைமுறையில் உள்ளது. சென்னை மாநகரில் பல பகுதிகள் விரைவாக வளர்ச்சி அடைந்துள்ளதைக் கருத்தில் கொண்டும், பொதுமக்களின் தேவையை கருத்தில் கொண்டும் இந்த அரசு பொறுப்பேற்ற பின், மூன்று சக்கர பயணிகள் வாடகை வண்டிகளுக்கென (ஆட்டோ ரிக்ஷா வண்டிகள்) 10 ஆயிரம் புதிய பர்மிட்டுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சென்னையில், தற்போது சுமார் 52,000 ஆட்டோ ரிக்ஷாக்கள் உள்ளன. சென்னையைவிட சிறிய நகரங்களான பெங்களூருவில் 78,000 ஆட்டோ ரிக்ஷா வண்டிகள் மற்றும் ஐதராபாத்தில் 64,000 ஆட்டோ ரிக்ஷா வண்டிகள் இருப்பதைக் கருத்தில் கொண்டும், சென்னையில் கூடுதல் ஆட்டோ ரிக்ஷாக்கள் தேவை என்பதை கருத்தில் கொண்டும், புதிய ஆட்டோ ரிக்ஷாக்கள் பதிவு செய்யப்படுவதற்கான தடையை நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இனி வரும் காலங்களில் மாநிலத்தில் அனைத்து பகுதிகளிலும் ஆட்டோ ரிக்ஷா பர்மிட்டுகள் தகுதி அடிப்படையில், விண்ணப்பம் செய்வோருக்கு வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் ஆட்டோ ரிக்ஷாக்களின் செயல்பாடுகளை அரசின் வழிமுறைகளுக்கேற்ப நடத்துவதற்கு இது உதவிகரமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

VII. போக்குவரத்து அல்லாத நான்கு சக்கர தனியார் வாகனங்களுக்கான ஆயுட்கால வரியை மாற்றி அமைத்தல்:–

புது டெல்லியில் நடைபெற்ற மாசுக் கட்டுப்பாடு வாரியக் கூட்டத்தில், சென்னை உள்பட 9 நகரங்களில் காற்று மிகவும் மாசு அடைந்துள்ளதாகவும், அதற்குக் காரணம் தனியார் வாகனங்களின் பெருக்கமே எனவும், சாலை நெரிசலுக்கும், காற்று மாசு அடைவதற்கும் சாலை விபத்துகள் அதிகரிப்பதற்கும் வாகனப் பெருக்கமே காரணம் எனவும் கூறி, வாகனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த தனியார் வாகனங்களுக்கு அதிக வரி விதிப்பது குறித்து மாநில அரசு பரிசீலிக்க வேண்டும் என்று ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

[2010 ஏப்ரல் 29

தற்போது கர்நாடகாவில், போக்குவரத்து அல்லாத தனியார் பயன்படுத்தும் விலை ரூ. 5 இலட்சத்திற்கு மிகாத மோட்டார் வாகனத்திற்கு 12 சதவீதமும், விலை ரூ. 5 இலட்சத்திற்கும் அதிகமான, ஆனால் ரூ. 10 இலட்சத்திற்கு மிகாத மோட்டார் வாகனத்திற்கு 13 சதவீதமும், விலை ரூ. 10 இலட்சத்திற்கு அதிகமான வாகனத்திற்கு 16 சதவீதமும் ஆயுட்கால வரி விதிக்கப்படுகிறது. அதேபோல், ஆந்திரப் பிரதேசத்தில், போக்குவரத்து அல்லாத தனியார் வாகனத்தின் மொத்த விலையில் 9 சதவீதமும் கம்பெனி, அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் வாகனங்களுக்கு விலையில் 12 சதவீதமும், தனியாரின் இரண்டாவது அல்லது அடுத்த வாகனங்களுக்கு விலையில் 12 சதவீதமும் ஆயுட்கால வரியாக விதிக்கப்படுகிறது.

ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் போக்குவரத்து அல்லாத தனியார் வாகனத்தின் மொத்த விலையில் 8 சதவீதம்தான் ஆயுட்கால வரி விதிக்கப்படுகிறது.

போக்குவரத்து அல்லாத தனியார் வாகனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன், அத்தகைய வாகனங்களுக்கான ஆயுட்கால வரி பின்வருமாறு மாற்றியமைக்கப்பட உள்ளது:-

ரூ. 10 இலட்சத்திற்கு மிகாத விலையுள்ள வாகனத்திற்கு வரி 10 சதவீதமாக உயர்த்தப்படும்.

ரூ. 10 இலட்சத்திற்கும் அதிகமான விலையுள்ள வாகனத்திற்கு வரி 15 சதவீதமாக உயர்த்தப்படும்.

இவ்வரி உயர்வு 01-06-2010 முதல் அமல்படுத்தப்படும்.

அண்டை மாநிலங்களிலிருந்து இம்மாநிலத்திற்கு மறு பதிவுக்காக வரும் மோட்டார் வாகனங்களுக்கும், தக்கவாறு ஆயுட்கால வரி மாற்றம் செய்யப்படும்.